Text

# காரை நலன்புரிச்சங்கம் (பிரித்தானியா)

# KARAI WELFARE SOCIETY (UK)

Registered Charity No: 1126413

**News Letter 4** **July 2014**

## 25ம் ஆண்டின் நிறைவு

### கால் நூற்றாண்டில் கால் பதிக்கும் பிரித்தானிய காரை நலன்புரிச் சங்கம்.

காரை மண்ணுக்காய் செயற்பட்ட, புலம்பெயர் மன்றங்களில், இன்றும் செயற்படு மன்றமாக பணியாற்றும் பிரித்தானிய காரை நலன்புரிச் சங்கத்தின் 25 ஆம் ஆண்டின் நிறைவு 2015. வருகிற ஆண்டின் கால் நூற்றாண்டுச் சிறப்பு நிகழ்வில் உங்களோடு இணைந்து விழாக் கண்டு மகிழக் காத்துக் கிடக்கிறது காரை நலன்புரிச் சங்கம்..

## சுகாதார மேம்படுத்தல்

**ஒரு சமூகத்தின் ஆரோக்கியம் அதன் சுகாதார சேவையில் ........**
**அந்த பாதையில் பிரித்தானியா காரை நலன் புரிச் சங்கம் ......**

பிரித்தானிய காரை நலன் புரிச் சங்கம் எமது ஊர் சுகாதார சேவையில் மிகப் பெரும் கவனம் காட்டி வருவது அனைவரும் அறிந்ததே. குறிப்பாக 2009 இல் இருந்து மிகுந்த அக்கறை காட்டி வருகின்றது என்றால் அது மிகை ஆகாது.

2009 இல் பெரிய அளவிலான சுகாதார சுற்றுச் சூழல் சார் முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் உதவிகள் மேற்கொள்ளப்பட்டன.

2010 இல் செல்வி வர்ஷினி தியாகலிங்கம் அவர்களின் தேம்ஸ் நதியிலானா தொண்டு நீச்சல் மூலம் ஈட்டப்பட்ட தொகை மூலம் வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ளோர்களுக்கான கண்படர் அகற்றல் சிகிச்சை அறிமுகப்படுத்தப்பட்டு இன்று வரை வருடத்தில் இருமுறை நடாத்தி வருதல் ஊர் சார் மக்களால் வரவேற்கப்படுகின்றது.

2011 இல் அப்போதைய DMO, Dr. ஷபாராஷ் மஜுமூடீன் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க எமது மன்றத்தால் வைத்தியசாலை சமையல் அறை முற்றுமுழுதாக புனருத்தாரணம் செய்து கொடுக்கப்பட்டது .

2012 இல் கடந்தகால நிர்வாகசபை தலைவரும் தற்போதைய போஷகர்களில் ஒருவருமான திரு. வி. நாகேந்திரம் அவர்களால் அவசர சிகிச்சை அறை ஒன்று அவரது பெற்றோர்கள் ஞாபகார்த்தமாக கட்டி அன்பளிப்பு செய்யப்பட்டது.

2013 இல் பிரித்தானிய காரை நலன் புரிச் சங்கம் பாரிய அளவிலான வேலைத் திட்டங்கள் இரண்டை முன்னெடுத்தது. அவையாவன ஆண், பெண் நோயாளிகள் தங்கும் அறைகள் முற்று முழுதாக புனருத்தாரணம் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்பது. இத்திட்டம் இவ் வருட ஆரம்பத்தில் நிறைவாகியுள்ளமை எமது நிர்வாகத்தின் மனநிறைவு. இத் திட்டத்தில் செய்து கொடுக்கப்பட்ட வேலைகளாவன, இரு அறைகளின் கீழ் நிலங்கள்



செராமிக் கற்கள் (Ceramic Tiles) பதித்து, உள் வெளியிலான பூச்சு, கதவு நிலைகள், யன்னல்கள் உட்பட, படுக்கை உபகரணங்கள் மேலும் பல உபகரண வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டது. இதற்கான

முழுத் தொகை 1 மில்லியன் ரூபாய் (பத்து இலட்சங்கள்) ஆகும்.

இவ் வேலைகள் அனைத்தும் காரை அபிவிருத்தி சபை நிர்வாக சபையினரின் நேரடி கண்காணிப்பில் மேற்கொள்ளப்பட்டது.

இந்த சந்தர்பத்தை பிரித்தானிய காரை நலன் புரிச் சங்கம் எமது அங்கத்தவர்களுக்கும், நலன் விரும்பிகளுக்கும், தனியார் உதவியாளர்களுக்கும், காரை அபிவிருத்தி சபை நிர்வாகத்திற்கும் நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றோம்.

2014 பெப்ரவரி "காரை கதம்பம் 2014" விழாவின் போது 1 மில்லியன் ரூபாய் (பத்து லட்சம்) எமது நிர்வாக சபையினரால் நிரந்தர வைப்புக் கணக்கில் இட்டு, இதில் வரும் வங்கி வட்டி வருமானம் மூலம் எமது மன்றம் தற்பொழுது வருடாவருடம் முன்னெடுத்துவரும் எமது ஊர் வைத்தியசாலை சம்பந்தமான சுகாதார நடவடிக்கைகள் தங்கு தடையின்றி நடைபெற ஏதுவாக இருக்கும் என உறுதி செய்யப்பட்டுள்ளது. உதாரணமாக கண்படர் அகற்றல் சிகிச்சை, சுகாதார சிகிச்சை முகாம், பொதுவான வைத்தியசாலை புனர்திருத்த வேலைகள் என்பனவாகும்.

தற்பொழுது சுவிஸ் காரை அபிவிருத்தி சபை பிரசவ அறையினை புனருத்தாரணம் செய்வதற்கான பொறுப்பினை ஏற்று, இவ்வேலைத் திட்டத்தினை ஆரம்பித்துள்ளார்கள்.

தற்பொழுது இரண்டு மாடி கட்டிடங்களை கொண்ட புதிய நிர்மாண வேலைகளை சுகாதார திணைக்களம் முன்னெடுத்து வருகின்றது.

அதைவிட எமது தற்போதைய எமது வைத்திய அதிகாரி Dr K. இந்திரமோகன் அவர்கள் எமது வைத்தியசாலையை ஒரு தேசிய அளவிலான சுகாதார முன்னிலை போட்டிகளில் கொண்டு



வந்துள்ளார். அவருக்கு எமது பாராட்டுக்குள்.

## பிருத்தானியா காரை நலன் புரிச் சங்கத்தின் நிதி உதவியுடன் நாலாம் கட்ட கண்படர் அகற்றல் சிகிச்சை 10 பேருக்கு நிறைவுற்றது..



பிரித்தானிய காரை நலன் புரிச் சங்கத்தினரால் வருடா வருடம் மேற்கொள்ளப்பட்டு வரும் மருத்துவ உதவித் திட்டத்தின் கீழ் கடந்த 22/10/2013 அன்று, நான்காம் கட்டமாக வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 10 பேர்களுக்கு கண்படர் அகற்றல் சிகிச்சை மூளாய் வைத்தியசாலையில் Dr. S. குகதாசன் அவர்களால் மேற்கொள்ளப்பட்டது.

இந்நாலாம் கட்ட இலவச கண்படர் அகற்றல் சிகிச்சைக்கு சுமார் 18 பேர்கள் வரையில் காரை அபிவிருத்தி சபை அலுவலகத்தில் தங்கள் பெயர்களை பதிவு செய்திருந்தனர்.

இவர்களில் 10 பேர்கள் உடனடி சிகிச்சைக்கு உட்படுத்தபட்டனர். மற்றும் இருவர் இந்த கண்படர் நோயினால் பாதிக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களது உடல் நலம் கருதி யாழ் போதன வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.


மேற்படி சிகிச்சைகளுக்கான உதவித் தொகையாக ரூபாய் 193,000 (ஒரு இலட்சத்து தொன்நூற்று மூவாயிரம் ரூபாய்) பிரித்தானியா காரை நலன் புரிச் சங்கத்தினரால் வழங்கப்படுள்ளது.

கடந்த வருடங்களில் முதல் தடவையாக 17 பேர்களுக்கும், இரண்டாம் தடவையாக 15 பேர்களுக்கும், மூன்றாம் தடவையாக (28/02/2013)

13 பேர்களுக்கும் இவ் கண்படர் அகற்றல் சிகிச்சை எமது சங்கத்தால் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இச்சிகிச்சையை திறம்பட ஒழுங்கமைத்து நடாத்தி முடித்த எமது காரை அபிவிருத்தி சபை நிர்வாக உறுப்பினர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

## எமது சங்கத்தின் பிதாமகன் சபா அண்ணாவின் முதலாம் ஆண்டு நினைவு கூறும் முகமாக சுகவாழ்வு இலவச மருத்துவ பரிசோதனை முகாம்




டாக்டர்.சபாபதி சபாரட்ணம் ஞாபகார்த்தமாக பிரித்தானியா காரை நலன்புரிச் சங்கத்தின் அனுசரணையுடன் காரைநகர் அபிவிருத்திச் சபையும் ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் இணைந்து நடாத்திய இலவச மருத்துவ முகாம் 01-06-14 இல் காரைநகர் அரசினர் வைத்தியசாலையில் நடைபெற்றது.

இந்த மருத்துவ முகாமில் இரத்தப் பரிசோதனை, சிறுநீர்ப் பரிசோதனை, பொதுப் பரிசோதனை, கொலஸ்ரோல், ஈ.சீ.ஜி பரிசோதனை உள்ளிட்ட பல்வேறு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படதுடன் பல், கண், மற்றும் பொது, குழந்தை வைத்திய நிபுணர்கள் கலந்துகொண்டு சிகிச்சை வழங்கியதுடன் வைத்திய நிபுணர்களின் ஆலோசனைகளும் வழங்கப்பட்டது.

நூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு பயன்பெற்ற இந்த மருத்துவ முகாமில் மருத்துவ சிகிச்சைகள் சுகாதாரப் பழக்கவழக்கங்கள் தொடர்பாக வீடியோப் படக்காட்சி காண்பிக்கப்பட்டதுடன் சிறப்பு வைத்திய நிபுணர்களின் ஆலோசணைகளும் மருத்துவக் கருத்தரங்கும் இடம்பெற்றது.

பொது வைத்திய நிபணர் Dr S.சிறிகரன் மருத்துவ ஆலோசனை வழங்கிறார்.

டாக்டர் சபாபதி சபாரட்ணம் ஞாபகார்த்தமாக இந்த இலவச மருத்துவ முகாம் நடாத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. இதற்கான நிதியுதவி தனி நபர் ஒருவரால் வழங்கப்பட்டது.

## களபூமியில் 1.25 மில்லியன் ரூபா செலவில் காரை ஆயுள் வேத வைத்தியசாலை அமைப்பதற்கான நிலம் கொள்வனவு.



களபூமி பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில், காரைநகர் கிழக்கு வீதியுடன் சேர்ந்த 21 பரப்பு காணி மேற்படி வைத்தியசாலை அமைப்பதற்கு பிரித்தானியா காரை நலன் புரிச் சங்கத்தின் நிதியுதவியுடன் கொள்வனவு செய்து வழங்கப்பட்டுள்ளது. இதற்கான கட்டுமான வேலைகள் 2015 இல் தான் ஆரம்பிக்கப்படும் என அறியப்படுகின்றது.

ஆரம்பத்தில் இவ் ஆயுள் வேத வைத்தியசாலை அமைப்பதற்கு நன்னீர் உள்ள, மூலிகைகள் வளர்ப்பதற்கு பதமான மண் உள்ள, பிரதான வீதியை அண்டியதுமான ஒரு காணி பல இடங்களில் காரை அபிவிருத்தி சபையினரால் தேடப்பட்டது. இறுதியில் மேற்படி காணியை காரை அபிவிருத்திசபை தலைவர் திரு சிவா மகேசன் அவர்கள் நிர்வாகம் தேர்ந்தெடுத்தது.

## குடிநீர் வினியோகம் –

## எதிர்கால திட்டங்கள்



எமது ஊரின் எதிர்கால குடிநீர் பற்றாக்குறையை குறைப்பதற்கு பிரித்தானியா காரை நலன்புரிச் சங்கம் கடந்த பல வருடங்களாக தம்மால் ஆன முயற்சிகளை மேற்கொண்டு தற்பொழுதும் மிகுந்த சிரமத்தின் மத்தியிலும் சேவையாற்றி வருவது அனைவரும் அறிந்ததே.

இன்னும் இரு வருடங்களில் யாழ் குடா நாடெங்குமே கடுமையான குடிநீர் பற்றாக்குறை ஏற்படும் என ஆய்வுகள் செய்தி வெளியிட்ட வண்ணம் உள்ளன. எனவே இதனை எவ்வாறு இயற்கையான முறையில் ஓரளவேனும் நிவர்த்தி செய்யலாம் என எண்ணிய எமது நிர்வாகம், ஊரில் உள்ள கைவிடப்பட்ட கேணிகள், நன்னீர் கிணறுகளை புனரமைப்பதற்கும், மேலும் நிர்மாணிப்பதற்குமென ரூபாய் 5 இலட்சத்தை இவ் வருடம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

கடந்த காலங்களில் களபூமியில் ஓர் குளம் அமைக்க காணி கொள்வனவு செய்து வழங்கப்பட்டது, சிவன் கோவிலடி கந்தர் குண்டு, பத்தர் கேணி, அல்லின் வீதி காமாட்சி கேணி மற்றும் இதே வீதியில் அமைத்துள்ள வேதரடைப்பு பகுதியை அண்டிய பகுதியில் உள்ள நன்னீர் கிணறு, வியாவில் வண்ணாங்குளம் என்பன புனரமைப்பதற்கு ரூபாய் 3 இலட்சங்கள் வழங்கப்பட்டன. இனி வரும் காலங்களிலும் இவ்வாறன அத்தியாவசிய தேவைகளை நிவர்த்தி செய்ய பிரித்தானியா காரை நலன் புரிச்சங்கம் முன் நிற்கும்.

## காரை அபிவிருத்தி சபை மாணவர் நூலக கால்கோள் விழாவும் வாணி விழாவும்

காரை அபிவிருத்தி சபையினால் புலம்பெயர் காரை அமைப்புக்களின் பேராதரவுடன் காரைநகர் புதுவீதிச் சந்தியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் 'காரை அபிவிருத்தி சபை மாணவர் நூலகம்'; விஜயதசமி நாளான 14-10-2013 சம்பிரதாயபூர்வமாக தொடக்கி வைக்கப்பட்டது. முதல்நாள் அன்று இப்புதிய நூலகக் கட்டிடத்திற்கு விநாயகர் வழிபாட்டுடன் சாந்தி



சடங்குகளும் செய்யப்பட்டிருந்தன.

காரை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு.சிவா.தி.மகேசன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவினை காரை அபிவிருத்தி சபையின் முன்னாள் செயலாளரும் நூலக நிர்மாணத் திட்டத்தின் ஒருங்கிணைப்பாளருமாகிய Dr. S நடராஜா வழி நடத்தினார்.

காரைநகரின் 14 முன்பள்ளிகளின் சிறார்கள் வழங்கிய காவடி, கோலாட்டம், நடனம் ஆகிய கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. களபூமி கலையகத்தின் ஏற்பாட்டில் சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாலய இசை ஆசிரியை திருமதி. S. கேதீஸ்வரியின் இசைக் கச்சேரி நடைபெற்றது.



## கல்வி மேம்படுத்தல்

பிரித்தானியா காரை நலன் புரிச்சங்கத்தின் பிரதான நோக்கங்களில் முக்கியமானதான கல்வி மேம்படுத்தல் எனும் திட்டத்தின் கீழ், அனைத்து கல்லூரிகள், பாடசாலைகள் யாவும் பாகுபாடுகள், பாரபட்சம் அன்றி அவர்களுக்கு உதவி ஊக்குவிக்க வேண்டும் என்பது எமது கருத்து.

கடந்த ஜனவரி மாத நிர்வாகசபை கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டு நிதி வழங்கப்பட்ட நிதியுதவிக் கோரிக்கைகள் பின்வருமாறு;

ஊரி பாடசாலை அதிபரின் வேண்டுகோளுக்கு இணங்க 1 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டது. இன் நிதி பாடசாலையின் முன் பாழடைந்த நிலையில் இருந்த சிறிய மண் கட்டடத்தை சுகாதாரமான முறையில் பிள்ளைகளின் பாவனைக்கு ஏற்றவாறு மாற்றி அமைப்பதற்கான வேண்டுகோளுக்கு இணங்க வழங்கப் பட்டது.

இவ்வாறு புனரமைக்கப்பட்ட புதிய கட்டடத்தை காரை அபிவிருத்தி சபை செயலாளர் திரு இ திருப்புகழுர்சிங்கம் (கிராம சேவகர்) அவர்கள் 07/12/2014 அன்று உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தார்

தோப்புக்காடு பாடசாலைக்கு Photo Copy இயந்திரம் ஒன்று வாங்குவதற்கு ரூபாய் 60,000 வழங்கப்பட்டுள்ளது .

வலந்தலை வடக்கு அ.மி.த.க பாடசாலைக்கு (சடையாளி) கணனி அறை நிலம் சீரமைப்பதற்கு ரூபாய் 60,000 வழங்கப்பட்டுள்ளது.

காரை மணிவாசகர் சபைக்கு வருடாந்த உதவித் தொகையாக ரூபாய் 20,000.00 வழங்கப்பட்டுள்ளது.

காரை மத்தி மேம்பாட்டு கழக கணனி வகுப்புகளுக்கு தளபாடங்கள் கொள்வனவு செய்வதற்கு ரூபாய் 50,000 வழங்கப்பட்டுள்ளது.

## காரை மாணவர் நூல் நிலையத்திற்கு நூற்றுக் கணக்கான நூல்கள் மற்றும் தளபாடங்கள் அன்பளிப்பு.

பிருத்தானிய காரை நலன் புரிச் சங்கத்தின் நிதி உதவியுடன், காரை மாணவர் நூல் நிலையத்திற்கு ரூபாய் 720,361 (ஏழு இலட்சத்து இருபதினாயிரத்து முன்னூற்று அறுபத்து ஒரு ரூபாய் )பெறுமதியுள்ள சுமார் 1800 நூல்கள் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

இ நூல்கள் அனைத்தும் காரை இந்துக் கல்லூரி மற்றும் யாழ்ரன் கல்லூரி ஆசிரியர்களால் பாடத்திட்டதிற்கு அமைய தெரிவு செய்யப்பட்டவை. இந் நூல்கள் வருங்கால காரை மாணவர் கல்வி மேம்பாட்டுக்கு பெரிதும் உதவும் என்பதில் ஐயம் இல்லை.

இந் நூல்கள் அனைத்தும் கொழும்பு "QUENCY BOOKS DISTRIBUTORS" உரிமையாளர் திரு . சுந்தரலிங்கம் கணநாதன் அவர்களின் பேருதவியுடனும், பிரித்தானியா காரை நலன் புரிச்சங்கத்தின் நீண்ட நாள் முயற்சியின் பயனாகவும் நூலகத்தை சென்றடைந்துள்ளது.

மேற்படி நூலகத்திற்கு பிருத்தானியா காரை நலன் புரிச்சங்கம் தளபாடங்கள், நூல்கள் கொள்வனவு செய்வதற்கென 1மில்லியன் (பத்து இலட்சம்) ரூபாய்களை கடந்த வருடம் வழங்கியிருந்தது. இவ் உதவித் தொகையில் இருந்தே வழங்கப்பட்ட இந் நூல்கள், மற்றும் நூலகத்திற்கான ஒரு பகுதி தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

## கணனிகள் நன்கொடை



பாவனையில் இருந்த நல்ல நிலையியுள்ள 12 கணனிகள் எமது மன்றத்தின் அங்கத்தவர் திரு அருள் கந்தசாமி அவர்களின் அனுசரணையுடன், நிறுவனம் ஒன்றில் இருந்து பெறப்பட்டு மீழ் திருத்தம் செய்யப்பட்டு காரைநகர், கிளிநொச்சி உட்பட 4 பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டது.
யாழ்ற்றன் கல்லூரிக்கு 5 கணணிகளும், கலாநிதி ஆ.தி.ம.ம. வித்தியாலயத்திற்கு 4 கணணிகளும் அவற்றிற்கான இணையத்தள இணைப்பும், கிளிநொச்சி குமரேசபுரம் G T M பாடசாலைக்கு 1 கணணியும், கிளிநொச்சி தம்பிரசபுரம் G T M பாடசாலைக்கு 1 கணணியும், காரை மாணவர் நூலகத்திற்கு 1 கணணியும் வழங்கப்பட்டது.

நன்கொடையாக பெறப்பட்ட இக் கணணிகளை மீழ் திருத்தம் செய்வதற்கும், மேலதிக துணை நுண் கருவிகள் பெறுவதற்கும், இவற்றின் விநியோக செலவுகளையும் பிருத்தானிய காரை நலன் புரிச் சங்கம் பொறுப்பேற்றது.
மேற்படி பாடசாலைகள் தங்கள் நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டனர்

## காரைநகர் மணிவாசகர் சபை நடாத்தும் சைவசமய பாடப் பரீட்சை

காரைநகர் மணிவாசகர் சபை நடாத்தும் சைவசமய பாடப் பரீட்சை 19.10.2013 காரைநகர் கோட்டப் பாடசாலைகளில் நடைபெற்றது.

காரைநகர் கோட்டத்தில் உள்ள 14 பாடசாலைகளிலும் நடைபெறும் இப்பரீட்சைக்கு சுமார் இரண்டாயிரம் மாணவர்கள் தரம் 2 தொடக்கம் தரம் 11வரையான மாணவர்கள் பங்கேற்றிருந்தனர்.

இப்பரீட்சையில் அதி உயர் புள்ளிகளைப் பெறும் 05 மாணவர்களுக்கு தங்கப்பதக்கங்களும்,தரம் ரீதியாக முதல் 05 இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு சான்றிதழ்களும் புத்தகப் பரிசில்களும் ஈழத்துச் சிதம்பரத்தில் டிசெம்பர் மாதம் நடைபெறும் மணிவாசகர் விழாவில் வைத்து வழங்கப்படும்.
மேலும் இச்சபையின் வேண்டுகோளுக்கு இணங்க எமது சங்கம் ஒவ்வொரு வருடமும் ரூபாய் 35,000 நிதியுதவி வழங்கி, இவர்களால் நடாத்தப்படும் "திருவாசகம்" முற்றும் மனனம் செய்யும் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கி ஊக்குவிப்பதற்கு உதவும். இப்படியான நற்பயனுள்ள திட்டங்கள் மூலம் சமய விழிப்புணர்வு சார்ந்த எதிர்கால சந்ததி யினரையும், மற்றும் மாணவர்களின் ஞாபக சக்தியையும் விருத்தியடைய செய்யும் என்பதில் ஐயமில்லை.

## பிரபஞ்ச கல்வியும் பிணியற்ற வாழ்வும்' என்ற தொனிப்பொருளில் யோகாசனம்,மற்றும் கலைநிகழ்வுகள்

பிரபஞ்ச கல்வியும் பிணியற்ற வாழ்வும்' என்ற தொனிப்பொருளில் யோகாசனம், மற்றும் கலை நிகழ்வுகள் 22-12-2013 இல் காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம. ம. வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

யோகா ஆரண்ய குரு முதல்வர் ந. ஆறுமுகம்ஜயா தலைமையில் நடைபெற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கமும் சிறப்பு விருந்தினராக பிரித்தானியாவில் இருந்து வருகைதந்துள்ள சிறியோ கிராம் சுந்தர் அவர்களும் கௌரவ விருந்தினர்களாக வடமாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் ப.விக்னேஸ்வரன்,தீவகக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரன்ஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந் நிகழ்வை காரைநகர் யோக ஆரண்யமும் இலண்டன் காரை நலன்புரிச் சங்கம், சுவிஸ் காரை அபிவிருத்திச் சபை, பிரான்ஸ் காரை நலன்புரிச்சங்கமும் இணைந்து நடாத்தியது

## கலாநிதி ஆ.தியாகராசா ஞாபகார்த்த கல்வி ஊக்குவிப்பு அறக்கட்டளை நிதியம்



அமரர் கலாநிதி ஆ.தியாகராஜா அவர்களின் ஞாபகார்த்த அறக்கட்டளை நிதியம் காரைநகரில் கல்வி பயிலும் க.பொ.த – சாதாரண தர உயர்தரம் ஆகிய மாணவ மாணவியர்களுக்கு அவர்களின் கல்வித் தேவைகளினதும், தகமைகளினதும் அடிப்படையில் வருடா வருடம் நிதயுதவி வழங்கி வருகிறது.

கலாநிதி ஆ.தியாகராசா அறக்கொடை நிதியத்தினால் மாணவர்களுக்கு உதவு தொகை வழங்கும் நிகழ்வு 28-05-14 இல் தியாகராசா ம.ம.வித்தியாலய நடராசா ஞாபகார்த்த மண்டபத்தில் கலாநிதி ஆ.தியாகராசா அறக்கொடை நிதியத்தின் தலைவரும் வலந்தலை தெற்கு அ.மி.த.க பாடசாலை அதிபருமான க.நேர்த்திரானந்தன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ், கலாநிதி ஆ.தியாகராசாவின் புதல்வி மங்கையற்கரசி சபாரட்ணம்,காரைநகர் கோட்டக் கல்வி அதிகாரி பு.ஸ்ரீவிக்னேஸ்வரன், யாழ்றரன் கல்லூரி அதிபர் வே. முருகமூர்த்தி, கலாநிதி ஆ. தியாகராசா ம. ம. வித்தியாலய அதிபர் திருமதி வாசுகி தவபாலன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

காரைநகரிலிருந்து பல்கலைக்கழக நுண்கலைப் பிரிவிற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவிகள் மற்றும் வியாவில் சைவ வித்தியாலயம், யாழ்றரன் கல்லூரி, சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம், தியாகராசா ம. ம. வித்தியாலயம் ஆகிய நான்கு பாடசாலைகளிலும் சாதாரண, உயர்தரக் கல்வியைத் தொடரும் மாணவர்கள் உள்ளிட்ட 59 பேருக்கு இவ்வாண்டு புலமைப்பரிசில் வழங்கப்பட்டது.

இந்த நிதியம் வருடம் ஒன்றிற்கு ஒரு மில்லியன் ரூபாய்கள் வரை (1,000,000) இக்கல்விச் சேவைக்கென வழங்கவுள்ளது. தனி ஒருவரால் வழங்கப்படும் இந்த நிதியுதவி, பிரித்தானிய காரை நலன்புரிச் சங்கத்தின் அனுசரணையுடன், வருடாவருடம் வழங்கப்பட்டு வருகிறது.

## “முதுசங்களைத்தேடி” தேடல் - நூல் மீள்பதிப்பு

இம்முறை எமது முதுசமாக காரைநகர் சைவ மகா சபையின் 1967ம் ஆண்டு வெளியிடப்பட்ட பொன் விழா மலர் எமது குடையின் கீழ் மீள் பதிப்பிற்காய் வருகின்றது. 1967ம் ஆண்டு பொன் விழா கண்ட இப்பெரும் சபையின் நூலை மறுபதிப்பு செய்வதில் பெருமகிழ்வு அடைகின்றோம். எமது ஊரில் உருவாக்கப்பட்ட முதல் ஒரு தலையாய சபையின் பொன் விழா மலர் இதுவாகும்.

1915ம் ஆண்டு காரைநகர் சவைப் பெருமக்களால் ஆரம்பிக்கப்பட்டு. தமிழையும் சைவத்தையும் எம் ஊரில் தறிகெட்டு விடாது (ஆங்கிலேயர் ஆட்சியில்) தழைக்க வைக்க பல தொண்டுகள் ஆற்றியது எமது சைவ மாக சபை. எனவே எமது சைவ மகா சபையின் பொன் விழா மலரானது காரை மக்கள் ஆகிய எங்கள் ஒவ்வொருவரினதும் கைகளில் தவழவேண்டிய ஒரு நூல் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.
தற்பொழுது இந்நூல் மீள்பதிப்பிற்கு உள்ளாகி வருகிறது.

## எம் விழாகள்

### 'காரை கதம்பம்-2014'



பிரித்தானியா காரை நலன்புரிச் சங்கத்தினால் ஆண்டுதோறும் நடத்தப்படும் பொங்கல் விழாவான 'காரை கதம்பம்-2014' மண்டபம் நிறைந்த ரசிகர்களுடன் வெற்றி விழாவாக ஜன. 25. 2014 அன்று KINGSBURY HIGH SCHOOL கலையரங்கில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக காரைநகரில் இருந்து காரை அபிவிருத்தி சபை மாணவர் நூலகத்தின் நிறுவுனரும் ஒருங்கிணைப்பாளருமாகிய Dr. S நடராஜா அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித் திருந்தார்.

மற்றும் பிரான்ஸ் காரை நலன்புரிச் சங்கத்தின் தலைவர் திரு.அருளானந்தம் செல்வச்சந்திரன் (நேரு மாஸ்ரர்) அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தார்.

பிரித்தானியா வாழ் காரைச் சிறார்களை ஒன்றிணைத்து அவர்களின் மொழி, பண்பாட்டு, கலைத் திறன்களை வெளிப்படுத்துவதற்கு களம் அமைத்துக் கொடுத்தமை இந்த விழாவின் குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாக அமைந்திருந்தது

## காரை சங்கமம் 2013



பிரித்தானியா காரை நலன் புரிச் சங்கத்தின் விளையாட்டு போட்டியுடன் கூடிய வருடாந்த ஒன்றுகூடலான காரை சங்கமம் 2013 நிகழ்வு 28-07-2013 வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது. நிகழ்வுகள் காலை 11:00 மணியளவில் ஆரம்ப மாகின. 305 பதிவு செய்யப்பட்ட விளையாட்டு போட்டியாளர்கள் உட்பட 1200 மக்கள் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## பிருத்தானியா காரை நலன் புரிச் சங்கத்தின் ஆண்டு 2013 க்கான பொதுக்கூட்டம்

பிருத்தானியா காரை நலன் புரிச்சங்கத்தின் ஆண்டு 2013 க்கான பொதுக்கூட்டம் 22/09/2013 லண்டன் மாநகரில் நடைபெற்றது. திரு.சரவணபவான் அவர்களின் தேவாரத்துடன், பிற்பகல் 03:30 மணியளவில் தலைவர் திரு தவராஜா தலைமையில் கூட்டம் ஆரம்பமானது.

- கூட்டத்தில் யாப்பு திருத்தம் முக்கிய இடத்தை பெற்றிருந்தது. யாப்பில் 10 திருத்தங்கள் இனி வரும் நிர்வாக நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.
- இவற்றில் ஒரு சில கடந்த கால ஒய்வு பெற்ற மூன்று தலைவர்கள் நிர்வாக சபைக்குள் (போஷகர்களாக) இருந்ததாக வேண்டும், தலைவராக நியமிக்கப்படுபவர் குறைந்த பட்சம் கடந்த 2வருடங்கள் நிர்வாக சபைக்குள் சேவையாற்றி இருக்க வேண்டும் என்பனவாகும்.

## காரைநகர் ஈழத்துச்சிதம்பரம் திருவெம்பாவை உற்சவம் தினமும் நேரடி ஒளிபரப்பு

காரைநகர் ஈழத்துச்சிதம்பரம் திருவெம்பாவை உற்சவம் தினமும் நேரடி ஒளிபரப்பு காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் நடைபெறவுள்ள திருவாதிரை திருவெம்பாவை உற்சவத்தை முன்னிட்டு www.karainagar.co இணையத்தளத்தில் டிசெம்பர் மாதம் நேரடி அஞ்சல் ஒளிபரப்பு இடம்பெறபற்றது இவ் ஒளிபரப்பு இலண்டன் காரை நலன்புரிச் சங்கம், சுவிஸ் காரை அபிவிருத்திச் சபை, பிரான்ஸ் காரை நலன்புரிச் சங்கத்தின அனுசரணையுடன் நடைபெற்றது.

## பிரித்தானிய காரை நலன் நலன்புரிச் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் 2014

பிரித்தானியா காரை நலன் புரிச் சங்கத்தின் 2014 ம் ஆண்டிற்கான வருடாந்த பொதுக்கூட்டம் (AGM) Sunday 28th September 2014 இன்று HARROW COUNCIL CHAMBER HALL, STATION ROAD, HA1 2UX, எனும் இடத்தில அமைந்துள்ள மண்டபத்தில் நடைபெற்றவுள்ளது. அனைவரையும் அன்புடன் அழைக்கின்றனர் பிரித்தானியா காரை நலன் புரிச் சங்கத்தினர்.

President: Mr P Thavarajah - 07951 950843
Secretary: Mr S.Sivapathasuntharam - 01908 558976
Treasurer: Mr N Ravindran - 020 8949 3226


Karai Welfare Society (UK)
127 Cassiobury Drive,
Watford, Herts, WD17 3AH, UK
Tel 01923 226000, Fax 01923 238289,
Email – info@karainagar@com
www.karainagar.org